# தமிழ் மொழியும் இலக்கியமும்

## தரம் 10, 11

## இலக்கியத்தொகுப்பு

## அலகு 04
## தனிப்பாடல்கள்



## வினா விடைத்தொகுப்பு

**கடந்த கால க.பொ.த (சா/த) வினாக்களுடன் ஒப்பிட்டு நோக்கப்பட்டுள்ளது**


**தொகுப்பாசிரியர்: செ.ராஜ்குமார்**


**"முடிந்தவரை செய்வதற்கு பெயரல்ல முயற்சி நினைத்த காரியத்தை முடிக்கும் வரை செய்வதற்கு பெயரே முயற்சி"**


**No - 15A, Anumar Street, Nochchimunai, Batticaloa T.P 0772926914**

## அலகு 04

# தனிப்பாடல்கள்

தமிழ் இலக்கியத்தில் பல்வேறு காலப்பகுதியில் வெவ்வேறு புலவர்களால் பாடப்பட்ட பல்சுவை நிரம்பிய பாடல்களின் தொகுப்பு தனிப்பாடல்களாகும். இவை தனிப்பாடற்திரட்டு எனும் பெயரால் அழைக்கப்படுகின்றது. தனிப்பாடல்கள் பாடிய புலவர்களாக, ஔவையார், கம்பர், ஒட்டக்கூத்தர், காளமேகப்புலவர், படிக்காசுப் புலவர், புகழேந்திப் புலவர், சொக்கலிங்கப் புலவர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இப்பாட அலகில் பின்வரும் புலவர்களின் தனிப்பாடல்களை இங்கு நோக்குவோம்.

1. **புகழேந்திப்புலவர் பாடல்**
2. **படிக்காசுப்புலவர் பாடல்**
3. **காளப்மேகப்புலவர் பாடல்**

## அ. புகழேந்திப்புலவர் பாடல்

ஒட்டக்கூத்தருக்கும் ஔவையாருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்ட போது ஒட்டக்கூத்தரை புலவராக ஏற்க மறுத்த ஔவையார், அவரை புலவராக ஏற்கவேண்டுமென்றால் ஒரு பாடலில் மூன்று மதிகள் வருமாறு பாடும்படி கூற ஒட்டக்கூத்தரோ **"வெள்ளத்தடங்கா சினவாளை"** எனத் தொடங்கி **"பிள்ளை மதி கண்டப்பேதை பெரிய மதியும் இழுந்தாளே"** என விருத்தம் ஒன்றைப் பாடினார். ஔவையார் மீது கொண்ட ஆத்திரத்தால் ஒரு மதியைத் தவறாக விட்டுவிட்டார். அப்போது ஔவையார் **"ஒட்டா ஒரு மதி கெட்டாய்"** எனக்கூறி புகழேந்திப்புலவரை பாடுமாறு பணித்தார் அப்போது **புகழேந்திப்புலவரால் பாடப்பட்ட விருத்தப்பாவே** இது.

### சந்தி பிரிக்கப்பட்ட பாடல்

**பங்கப் பழனத்து உழும் உழவர்**
**பலவின் கனியைப் பறித்தது என்று**
**சங்கு இட்டு எறிய குரங்கு இளநீர்**
**தனைக் கொண்டு எறியும் தமிழ் நாடா**
**கொங்கர்க்கு அமராபதி அளித்த**
**கோவே இராச குல திலகா**
**வெங்கட் பிறைக்கும் கரும்பு இறைக்கும்**
**மெலிந்து அம்பு இறைக்கும் விழிவேலே.**

### அரும்பத விளக்கம்

1. பங்கம் - சேறு
2. பழனம் - வயல்
3. தமிழ் நாடா - தமிழ் நாட்டின் தலைவன்
4. கொங்கார் - கொங்க நாட்டவர்
5. அமராபதி - சொர்க்க நகரம்
6. வெங்கட் பிறை - வெண்மையான சந்திரன்
7. கரும்பிறை - மன்மதன் (கரும்பு இறைவன்)
8. அம்பு இறைக்கும் - கண்ணீர் சொரியும்

### பொருள்

சேறு பொருந்திய வயலில் உழுகின்ற உழவர்கள், குரங்குகள் பலாக்கனிகளை பறித்து பாழ் செய்கின்றன என்று எண்ணி வயலில் உள்ள சங்குகளை எடுத்து குரங்குகளுக்கு எறிய, அதற்கு குரங்குகள் பழி வாங்க நினைத்து நல்ல இளநீர்களை பறித்து உழவர்கள் மீது எறிகின்ற வளம் பொருந்திய தமிழ் வளங்கும் தமிழ் நாட்டின் (சோழநாடு) தலைவனே, பகைவர்களான கொங்கநாட்டவர்களுக்கு யுத்தத்தில் சுவர்க்க நகரம் (அமராவதி) கொடுக்கின்ற அரசனே! வெப்பமுள்ள பிறைச்சந்திரனின் நிலவொளியாலும் கரும்புவில் ஏந்துகின்ற மன்மதன் காரணமாகவும் உடல் தளர்ந்து பெண்ணுடைய அழகிய கண்களாகிய வேல்விழியில் இருந்து கண்ணீர் சொரிகின்றாள் (இவள் நிலை இரங்கத்தக்கதாகும் )



S Rajkumar

# வினாவிடை

**01. பின்வரும் குறுவினாக்களுக்கு விடை எழுதுக**

**1..“ பங்கப்பழனத்து உழும் உழவர்**

அ. இங்கு பழனம் என்பதன் பொருள்?

வயல்

ஆ. பங்கம் என்பது உணர்த்தும் கருத்து யாது?

சேறு

**2. “ கொங்கர்க்கு அமராபதி அளித்த**
**கோவே இராச குலதிலகா..”**

அ. இங்கு எந்த மன்னன் சிறப்பிக்கப்படுகின்றான்?

சோழ மன்னன்

ஆ. அமராபதி எனப்படுவது யாது?

சொர்க்கலோகம், அதனுடைய தலைநகரம்

**3. “ வெங்கட் பிறைக்கும் கரும்பு இறைக்கும்**
**மெலிந்து அம்பு இறைக்கும் விழிவேலே... ”**

அ. வெங்கட் பிறை என்பதன் கருத்து?

வெப்பம் நிறைந்த இளம்பிறைச் சந்திரன்

ஆ. கரும்பு இறை என்பதன் கருத்து?

கரும்புவில் ஏந்விய இறைவன் - மன்மதன்

இ. விழிவேல் என்பதில் உள்ள அணி?

உருவகஅணி - விழி வேலாக உருவகிக்கப்பட்டுள்ளது

**02. இப் பாடலில் சோழ நாட்டின் வளம் எவ்வாறு வெளிப்படுகின்றது ? ( O/L 2017 06. அ )**

- நல்ல சேறு நிறைந்த,விளைச்சல் தரக்கூடிய வயல்களில் உழவுத் தொழில் சிறப்பாக நடைபெறும் நாடு.
- வயல்களில் அதிக சங்குகள் விளைகின்ற நீர்வளம் பொருந்திய நாடு
- பழங்கள் நிறைந்த பலாமரங்கள் வயலுக்கு அருகிலே நிறைந்திருத்தல்
- வயலின் அருகிலேயே இளநீர் தரும் தென்னை மரங்கள் காணப்படுதல்
- இனிய தமிழ் வழங்கும் நாடாக விளங்குதல்
- வீரம் பொருந்திய மன்னனைக் கொண்ட நாடு

**03. சோழ மன்னன் வீரம், சிறப்பு எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகின்றது ? ( O/L 2017 06. ஆ )**

- வீரம் - போரில் கொங்க நாட்டவரை தோற்கடித்து அவர்களுக்கு மரணத்தை பரிசளிப்பவன் அதாவது சுவர்க்க நகரத்திற்கு அவர்களை அனுப்பிவைப்பவன்.
- சிறப்பு - தமிழ் வழங்கும் சோழ நாட்டின் மன்னன்
- இராஜ குலத்தலைவனாக விளங்குபவன்

**04. இப்பாடலில் வெளிப்படும் மூன்று பிறைகளும் எவை?**

- வெண்கட்பிறை - வெப்பமுள்ள இளம் பிறைச்சந்திரன்
- கரும்பிறை - கரும்பு வில் ஏந்திய மன்மதன் கரும்புக்கு இறைவன்
- அம்பிறை - பெண்ணின் கண்ணீர், விழிநீா

**05 தலைவன் மீது தலைவி கொண்டுள்ள காதல் அல்லது தலைவியின் ஆற்றாமை எவ்வாறு காட்டப்படுகின்றது ( O/L 2017 06. இ) ( O/L 2020 02.II ஆ)**

- தலைவனை பிரிந்த தலைவி மாலை நேரத்தில் அடைகின்ற துன்பம் எடுத்துக்காட்டப்படல்
  - வெம்மை நிறைந்த சந்திரன் காதலை துண்டி வருத்துதல்
  - மன்மதன் கணைகள் காவலை ஏற்படுத்தி வருத்துதல்
  - உடல் மெலிந்து கண்ணீர் சொரிதல்



S.Rajkumar

**06. உழவர்கள் தம் தாகம் தீர்ப்பதற்கு கையாண்ட உத்தி யாது?**

உழவர்கள் தமக்கு தாகம் ஏற்படவே, வயலில் உள்ள சங்குகளை எடுத்து குரங்குகள் பலாக்கனிகளை பாழ் செய்கின்றன எனச் சாட்டுக் கூறி எறிந்தனர். உடன் குரங்குகள் அதற்கு பழி வாங்க இளநீர்களை பறித்து உழவர்கள் மீது எறிந்தன. அதன் மூலம் உழவர்கள் தம் தாகத்தினை தீர்த்து கொண்டனர்.

## ஆ.படிக்காசிப்புலவர் பாடல்

- 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர் தொண்டைமண்டலத்தில் கலண்டை எனும் ஊரில் பிறந்தவர்
- **தொண்டைமண்டலச்சதகம்** எனும் நூறு பாடல்களைக் கொண்ட நூலைப் பாடியவர்
- சீதக்காதிவள்ளலின் கொடைத் தன்மையைப் புகழ்ந்து பாடினார்.

**சந்தி பிரிக்கப்பட்ட பாடல்**

**ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்கவிற்கும்**
**கார் தட்டிய பஞ்ச காலத்திலே தங்கள் காரியப் பேர்**
**ஆர் தட்டினும் தட்டு வராமலே அன்னதானத்திற்கு**
**மார் தட்டிய துரைமால் சீதக்காதி வரோதயனே.**

### அரும்பத விளக்கம்

1. ஒக்க - சமமாக
2. கார் - மழை, மேகம்
3. காரிய பேர் - சுயநலவாதிகள்
4. மார் தட்டிய - நெஞ்சு தட்டிய
5. துரைமால் - கொடை வள்ளல்
6. வரோதயன் - வரம் பெற்றவன்

### பொருள்

ஒரு தட்டிலே பொன்னும், இன்னொரு தட்டிலே நெல்லும் வைத்து சமப்படுத்தி விற்கும், மழை இல்லாது போன பஞ்ச காலத்திலே தம் சுயநலத்திற்காக யார் தடுத்தாலும் கேளாது அன்னதானத்திற்கு தட்டுப்பாடு வராமலேயே வளங்குவதற்கு நான் இருக்கின்றேன் என்று மார் தட்டிய கொடை வள்ளாகிய சீதக்காதி இறைவரத்தினால் பிறந்தவனே

**01. பின்வரும் குறுவினாக்களுக்கு விடை எழுதுக.**

1.. “ **ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்கவிற்கும்**
**கார் தட்டிய பஞ்ச காலத்திலே...**

அ. இப் பாடலைப் பாடியவர் யார்?
படிக்காசுப் புலவர்

ஆ. இங்கு கார் தட்டிய என்பதன் கருத்து யாது?
மழை பொய்த்துப் போன

2. “ **ஆர் தட்டினும் தட்டு வராமலே அன்னதானத்திற்கு**
**மார் தட்டிய துரைமால் சீதக்காதி வரோதயனே...**

அ. இவ்வடிகளின் சிறப்பிக்கப்படும் வள்ளல் யார்?
சீதக்காதி

ஆ. வரோதயன் என்பதால் கருதப்படுவது யாது?
வரத்தினால் பிறந்தவன்

**02. இப்பாடலில் பஞ்ச காலத்தின் கொடுமை எவ்வாறு வெளிக்காட்டப்படுகின்றது? ( O/L2018 02.I.ஆ)**

பொன்னின் விலையானது அதிகமானது அத்துடன் மதிப்பு மிக்கது, ஆனால் மழை பொய்த்துப் போன பஞ்ச காலத்தில் நெல்லானதுபொன் போன்று மதிப்பு மிக்க பொருளாக மாறியது. அதாவது பொன்னுக்கு சமமாக நெல்லும் மதிக்கப்பட்டு சமமாக அளந்து விற்குமளவு காணப்பட்டது. இதன் மூலம் நெல்லை வாங்கி உண்ண முடியாத பஞ்ச கால நிலை வெளிப்படுகின்றது. ஏழை மக்கள் நெல்லை வாங்கி தம் பசியை போக்க முடியாத நிலை இங்கு வெளிக்காட்டப்படுகிறது.

**“ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்கவிற்கும்**
**கார் தட்டிய பஞ்ச காலத்திலே..** எனும் அடிகள் அந்நிலையினை தெளிவுறுத்துகின்றது.



S.Rajkumar

**03. சீதக்காதி வள்ளலின் கொடைத் திறன் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது? ( O/L 2018 02. I.அ)**
பஞ்ச காலத்தில் நெல்லின் மதிப்பு உயர்வானது. பொன் போன்று விளங்குவது நெல்லாகும். அவ் வேளையிலும் யார் வந்து தடுத்தாலும் ஏழை மக்களுக்கு அன்னதானம் செய்து மக்களின் பசியைப் போக்கியவன் சீதக்காதி வள்ளல். அதாவது பஞ்ச காலத்தில் யாருமே அன்னதானம் செய்ய முன்வர மாட்டார்கள். ஆனால் நான் இருக்கின்றேன் என்று மார் தட்டி மக்களுக்கு உணவளிப்பவன் எனும் வகையில் சீதக்காதியின் கொடைத்திறன் வெளிப்படுகின்றது. இதனை, .

**“….கார் தட்டிய பஞ்ச காலத்திலே தங்கள் காரியப் பேர்**
**ஆர் தட்டினும் தட்டு வராமலே அன்னதானத்திற்கு**
**மார் தட்டிய துரைமால் சீதக்காதி வரோதயனே** எனும் அடிகள் மூலம் காணலாம்.

# இ. காளமேகப்புலவரின் பாடல்

- காளமேகம் என்பது **இடி முழங்கும் மேகம்** அல்லது **மழை மேகம்** எனப் பொருள் படும் அதுபோல் கவி பொழியும் திறன் கொண்டதால் **வரதன்** எனும் இயற்பெயர் கொண்டவர் **காளமேகம்** எனப்பட்டார். **நாயக்கர் காலத்தில் கி.பி 15ஆம் நூற்றாண்டில்** வாழ்ந்தார்
- **வசைப்பாடல்** பாடுவதில் வல்லவர் **சிலேடைப்பாடல், வித்துவச்செருக்குப்பாடல்கள்** என நூற்றுக்கணக்கில் பாடியுள்ளார்
- **திருவானைக்கா உலா, சரஸ்வதிமாலை, பரப்பிரம்ம விளக்கம், சித்திரமடல்** போன்ற தனி நூல்களை பாடியுள்ளார்
- **அதிமதுரகவி முதலியார்** இவரைப்பார்த்து நீ யார்? உனக்கு என்ன தெரியும்? என்று கேட்டபோது பின்வரும் பாடலைப் பாடினார்

**சந்தி பிரிக்கப்பட்ட பாடல்**

**கழியும் பிழை பொருள் தள்ளி நன்னூலாம் கடலில் உண்டு**
**வழியும் பொதிகை வரையினில் கால் கொண்டு வண் கவிதை**
**மொழியும் புலவர் மனத்தை இடித்து முழங்கி மின்னிப்**
**பொழியும் படிக்கு கவி காளமேகம் புறப்பட்டதே.**

### அரும்பத விளக்கம்

1. கழியும் - விலக்கத்தக்க
2. தள்ளி - விலக்கி
3. நன்னூல் - நல்ல நூல்கள்
4. வரை - மலை
5. வண் கவிதை - வனப்பு, அழகிய கவிதை

### பொருள்

விலக்கத்தக்க பிழைகளையெல்லாம் விலக்கி, கடலளவு நல்ல நூல்களை அறிவுக்கு உணவாக உண்டு அருவிகள் நிரம்பி வழிகின்ற பொதிகை மலையிலே நிலை கொண்டு, அழகிய கவிதை களைப் பாடுகின்றபுலவர்களுடைய மனமாகிய வானத்திலே இடித்து, முழங்கி, மின்னி கவி மழை பொழியும் படியாக இந்தக் கவி காளமேகம் புறப்பட்டுவிட்டதே.

**01. பின்வரும் குறுவினாக்களுக்கு விடை எழுதுக.**

1.. **“ கழியும் பிழை பொருள் தள்ளி நன்னூலாம் கடலில் உண்டு... ( O/L 2019 02. II.ஆ**

அ. கழியும் பிழைபொருள் என்பதால் கருதப்படுவது?
விலக்கத்தக்க பொருட் பிழைகள்

ஆ. நல்னூலாம் கடல் என்பதில் உள்ள அணி?
உருவகம் - நன்னூலாகிய கடல்

2. **“ வழியும் பொதிகை வரையினில் கால் கொண்டு**
**வண் கவிதை மொழியும் புலவர்...**

அ. இதில் பொதிகை வரை என்பது உணர்த்தும் பொருள்?
வரை என்பது மலை. ஆகவே பொதிகை மலை

ஆ. வண் கவிதை என்தால் கருதப்படுவது?
வனப்பு, அழகு மிக்க கவிதை



S.Rajkumar

**02. இப் பாடலில் காளமேகப்புலவரின் கவிச் சிறப்பு வெளிப்படும் தன்மை யாது? ( O/L 2019 02. II.அ)**

விலக்க வேண்டிய பொருட் பிழைகளை நீக்கி கடலளவு அறிவு நூல்களை கற்று கவி பாடுபவர் காளமேகப்புலவர். அருவிகள் நிரம்பி வழிகின்ற பொதிகை மலையிலே நிலை கொண்டு, அழகிய கவிதைகளைப் பாடுகின்ற புலவர்களுடைய மனமாகிய வானத்திலே இடித்து, முழங்கி, மின்னி கவி மழை பொழியும் படியாக இந்தக் கவி காளமேகம் புறப்பட்டுவிட்டதே.

அதாவது மற்ற புலவர்களை விடவும் கவி பாடும் ஆற்றல் படைத்தவர் காளமேகப்புலவர் என இங்கு தெளிவாகின்றது.

**03. புலவரின் கற்பனைத் திறன் எவ்வாறு வெளிப்படுகின்றது?**

இப் பாடலில் இயற்கைக் காட்சியுடன் புலவரின் கற்பனை வெளிப்படுகிறது. முழங்கி, மின்னல் மின்னி, வானம் எவ்வாறு மழை பொழியுமோ அது போல காளமேகப் புலவரும் கவிதை பாடும் ஆற்றலுடையவர் என கூறப்படுகின்றது. அறிவு நூல்கள் பலவற்றை கற்று வனப்பு மிக்க கவிதைகளை ஏனைய புலவர்கள் அச்சம் கொள்ளும் படியாக பாடுவதற்கு கவி காளமேகம் புறப்பட்டு விட்டதே என புலவரின் கற்பனையாற்றல் இங்க வெளிப்படுகின்றது.

## ஈ. காளமேகப்புலவரின் சிலேடைப்பாடல்

### சந்தி பிரிக்கப்பட்ட பாடல்

**ஆடிக் குடத்து அடையும் ஆடும் போதே இரையும்**
**மூடி திறக்கின் முகம் காட்டும் - ஓடி மண்டை**
**பற்றி பரபர எனும் பாரில் பிண்ணாக்கும் உண்டாம்**
**உற்றிடு பாம்பு எள்ளு எனவே ஒது.**

## அரும்பத விளக்கம்

1. இரையும் - சத்தம் செய்யும்
2. பிண்ணாக்கு - பிளந்த நாக்கு, பிளவு பட்ட நாக்கு
3. உற்றிடு – ஒத்திடும்

## பொருள்

பாம்பானது படமெடுத்து ஆடிய பின் குடத்தினுள் சென்று அடைந்து விடும். படம் எடுத்து ஆடும் போது இரையும், குடத்தில் அடைந்த பின் மூடித் திறந்தால் தன் தலையை தூக்கி முகத்தைக் காட்டும். பாம்பு தீண்டினால் விஷம் தலைக்கேறி தலை பரபரக்கும். பாம்புக்கு பிளந்த நாக்கு உள்ளது. இதைப் போலவே எள்ளானது செக்கிலே ஆட்டப்பட்டு குடத்திலே எடுத்து அடைக் கப்படும். செக்கிலே ஆட்டும் போது இரைச்சல் ஓசை உண்டாகும். குடத்தின் மூடியைத் திறந்தால் எண்ணெய் எம் முகத்தைக் காட்டும். எண்ணெய்யைக் தலையிலே தடவினால் தலை பரபரக்கும். எள்ளிலிருந்து எண்ணெய் எடுத்தபின் எஞ்சுவது பிண்ணாக்கு. எனவே இவ்விரண்டையும் ஒத்துப்பார்க் கக்கூடியதாய் உள்ளது. ஆகவே எள்ளையும் பாம்பையும் ஒன்றையொன்று ஒத்ததாகும் என்று சொல்லுக.

**01. பின்வரும் குறுவினாக்களுக்கு விடை எழுதுக.**

**1.. “ ஆடிக் குடத்து அடையும் போதே இரையும்**
**மூடி திறக்கின் முகம் காட்டும்... ( O/L 2017 01. IV )**

அ. இங்கு ஒப்பிடப்பட்ட இரு பொருட்களும் எவை?
பாம்பு , எள்ளு

ஆ. இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள அணி யாது? **( O/L 2020 01. III ஆ )**
சிலேடை

**2. “ ஓடி மண்டை பரபர எனும் பாரில் பிண்ணாக்கு உண்டாம்...**

அ. பிண்ணாக்கு என்தன் கருத்து யாது?
பிளந்த நாக்கு

ஆ. பிண்ணாக்கு என்பது பாம்பு, எள்ளு என்பவற்றிற்கு எவ்வாறு ஒப்பாகின்றது?
பாம்பு - பிளவு பட்ட நாக்கு **( O/L 2020 01. III அ )**
எள்ளு - எள்ளில் எண்ணெய் வந்த பின் எஞ்சுவது பிண்ணாக்கு



S.Rajkumar

3. அ. காளமேகப்புலவரின் இயற்பெயர் யாது?
வரதன்
ஆ. காளமேகப்புலவருக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பெயர்?
ஆசுகவி, சிலேடைக்கவி

**01. இப்பாடலில் பாம்பு, எள்ளு என்பவற்றின் ஒத்த தன்மைகளை எடுத்துக்காட்டுக?**

- ❖ ஆடிக் குடத்தை அடையும்
  - பாம்பு - படமெடுத்து ஆடிய பின் குடத்தினுள் சென்று அடைந்துவிடும்
  - எள்ளு - செக்கிலே ஆட்டப்பட்டு குடத்தினுள் எடுத்து அடைக்கப்படும்
- ❖ ஆடும் போது இரையும்
  - பாம்பு - படம் எடுத்து ஆடும் போது இரையும்
  - எள்ளு - செக்கிலே ஆட்டப்படும் போது இரைச்சல் உண்டாகும்
- ❖ மூடித்திறக்கின் முகம் காட்டும்
  - பாம்பு - குடத்தில் அடைத்து மூடிப் பின் திறக்கும் போதுதலையை தூக்கி காட்டும்
  - எள்ளு - குடத்தின் மூடியைத் திறந்தால் எண்ணெய் எம் முகத்தை காட்டும்
- ❖ ஓடி மண்டை பரபரக்கும்
  - பாம்பு – தீண்டினால் விசம் தலைக்கேறி தலை பரபரக்கும் .
  - எள்ளு - எண்ணெய்யை தலையில் வைத்தால் தலையில் பரபர எனும் உணர்வு ஏற்படும்
- ❖ பிண்ணாக்கு உண்டாம்
  - பாம்பு - பிளவு பட்ட நாக்கு உள்ளமை
  - எள்ளு - எள் எண்ணெய் வந்த பின் எஞ்சுவது பிண்ணாக்கு

S.Rajkumar

# *கடந்தகால வினாக்கள்*

1 **" ஆடிக் குடத்து அடையும் போதே இரையும்**
**மூடி திறக்கின் முகம் காட்டும்...** **( O/L 2017 01. IV )**

அ. இங்கு ஒப்பிடப்பட்ட இரு பொருட்களும் எவை?
பாம்பு , எள்ளு

ஆ. இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள அணி யாது?
சிலேடை

**" ஓடி மண்டை பரபர எனும் பாரில் பிண்ணாக்கு உண்டாம்...**

ஆ. பிண்ணாக்கு என்பது பாம்பு, எள்ளு என்பவற்றிற்கு எவ்வாறு ஒப்பாகின்றது?
பாம்பு - பிளவு பட்ட நாக்கு **( O/L 2020 01. III அ )**
எள்ளு - எள்ளில் எண்ணெய் வந்த பின் எஞ்சுவது பிண்ணாக்கு

ஆ. இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள அணி யாது? **( O/L 2020 01. III ஆ )**
சிலேடை

**03. சீதக்காதி வள்ளலின் கொடைத் திறன் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது? ( O/L 2018 02. I.அ)**
பஞ்ச காலத்தில் நெல்லின் மதிப்பு உயர்வானது. பொன் போன்று விளங்குவது நெல்லாகும். அவ் வேளையிலும் யார் வந்து தடுத்தாலும் நான் இருக்கின்றேன் என்று மார் தட்டி மக்களுக்கு உணவளிப்பவன் எனும் வகையில் சீதக்காதியின் கொடைத்திறன் வெளிப்படுகின்றது.

**02. இப் பாடலில் பஞ்ச காலத்தின் கொடுமை எவ்வாறு வெளிக்காட்டப்படுகின்றது?**
**( O/L 2018 02. I.ஆ)**

பொன்னின் விலையானது அதிகமானது அத்துடன் மதிப்பு மிக்கது, ஆனால் மழை பொய்த்துப் போன பஞ்ச காலத்தில் நெல்லானதுபொன் போன்று மதிப்பு மிக்க பொருளாக மாறியது. அதாவது பொன்னுக்கு சமமாக நெல்லும் மதிக்கப்பட்டு சமமாக அளந்து விற்குமளவு காணப்பட்டது.

1.. **" கழியும் பிழை பொருள் தள்ளி நன்னூலாம்**
**கடலில் உண்டு...** **( O/L 2019 02. II.ஆ)**

ஆ. நல்னூலாம் கடல் என்பதில் உள்ள அணி?
உருவகம் - நன்னூலாகிய கடல்

**02. இப் பாடலில் காளமேகப்புலவரின் கவிச் சிறப்பு வெளிப்படும் தன்மை யாது?**
**( O/L 2019 02. II.அ)**

விலக்க வேண்டிய பொருட் பிழைகளை நீக்கி கடலளவு அறிவு நூல்களை கற்று கவி பாடுபவர் காளமேகப்புலவர். விலக்கத்தக்க பிழைகளையெல்லாம் விலக்கி, கடலளவு நல்ல நூல்களை அறிவுக்கு உணவாக உண்டு அருவிகள் நிரம்பி வழிகின்ற பொதிகை மலையிலே நிலை கொண்டு, அழகிய கவிதை களைப் பாடுகின்ற புலவர்களுடைய மனமாகிய வானத்திலே இடித்து, முழங்கி, மின்னி கவி மழை பொழியும் படியாக இந்தக் கவி காளமேகம் புறப்பட்டுவிட்டதே.

**02. இப் பாடலில் சோழ நாட்டின் வளம் எவ்வாறு வெளிப்படுகின்றது ? ( O/L 2017 06. அ )**

**03. சோழ மன்னன் வீரம், சிறப்பு எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகின்றது ? ( O/L 2017 06. ஆ )**
**( O/L 2020 02. II அ )**

**05 தலைவன் மீது தலைவி கொண்டுள்ள காதல் தலைவி கொண்டுள்ள ஆற்றாமை எவ்வாறு காட்டப்படுகின்றது**
**( O/L 2017 06. இ) ( O/L 2020 02.II ஆ)**



S. Rajkumar